# முரசொலி

மக்களின் நான்கு — விலை ரூபா: 5-00

முரசு 05 ஒலி 74 ஆங்கீரச வைகாசி 06 (19 05 1992) செவ்வாய்


## படையினரின் பாதுகாப்பு நிலைகளில் பாரிய மாற்றங்கள் செய்யப்படும்

இராணுவத்தின் முன்னணி பாதுகாப்பு நிலைகளில் பாரிய கட்டமைப்பு மாற்றங்கள் செய்யப்பட விருப்பதாகவும் இவை அதிகரித்து வரும் புலிகளின் தாக்குதல்களை தடுத்து நிறுத்த உதவும் எனவும் உயர் இராணுவ அதிகாரி ஒருவர் கூறியதாக கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது. "நாம் முன்னணிப் பாதுகாப்பு நிலைகளைப் பலப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கிறோம்" எமது நிலைகளில் உள்ள பலவீனங்களாலேயே பல தாக்குதல்கள் இடம் பெறுகின்றன. படையினர் குழிகளில் உள்ள அசட்டையீனமும் கட்டுப்பாட்டின்மையுமே இதற்குக் காரணம் என்றும் அவ்வதிகாரி தெரிவித்துள்ளார் கடந்த வாரம் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டில் முன்னணி பாதுகாப்பு நிலைகளில் குறிப்பாக வவுனியாவில் தாக்குதல்கள் அதிகரித்திருப்பதாக இராணுவப் பேச்சாளர் மேஜர் சரத் முனசிங்க கூறியிருப்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

# இந்தியத் தடை, நாடு கடத்தல் நடவடிக்கை; பௌத்த சங்கங்கள் கருத்துமோதல்

## அரசுக்கு புதிய நெருக்கடி?

விடுதலைப்புலிகள் மீது இந்தியா தடை விதித்ததையடுத்து அந் நாடு ஸ்ரீலங்காவின் விவகாரங்களில் நேரடியாக தலையிடுமா என்பது குறித்து தற்போது தென்னிலங்கை பௌத்த மஹா சங்கங்களிடையே கருத்துவேறுபாடுகள் எழுந்துள்ளதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

ஸ்ரீலங்கா விவகாரங்களில் இந்தியா நேரடியாக நடவடிக்கை எடுக்க முயற்சித்தால் அது இந்தியாவின் மற்றுமோர் தலையீடாகவே இருக்குமென பிக்குகளில் ஒருபிரிவினர் கூறுகின்றனராம் இதனால் இது குறித்து அவர்கள் அரசை ஒரு நெருக்கடிக்குள்ளாக்கலாம் எனச்சுட்டிக்காட்டப்படுகிறது ஆனால் இந்தியாவின் எச்சரிக்கையை மீறி விடுதலைப் புலிகளுடன் ஸ்ரீலங்கா அரசு

— 4 ஆம் பக்கம் பார்க்க

## இராணுவ வாகன உதிரிப்பாகங்களுக்கு அதிகாரிகள் சீனா விஜயம்

அண்மையில் புதிதாக அமைக்கப்பட்ட தடைகளும் காலாட் படைப் பிரிவுக்கென சீனாவிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட இராணுவ வாகனங்களுக்கு உதிரிப்பாகங்கள் பெற்றுக் கொள்வதில் ஸ்ரீலங்கா இராணுவம் எதிர் நோக்கும் பிரச்சினைகள் பற்றி ஆராயவென இராணுவ ஆயுதக்களஞ்சியப் பிரிவைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் குழுவொன்று சீனா சென்றுள்ளது.

இராணுவத்தின் பேச்சி இயந்திரங்களை பழுது பார்க்கவென இங்கு வந்த சீனப்பொறியியலாளர்களின் வேண்டுகோளின் பேரிலேயே இக்குழுவினர் சீனா செல்வதாக அறியப்படுகின்றது.

★ ஹெல உறுமய கோரிக்கை

## தொண்டா பகற் கனவை கைவிட வேண்டும்

விடுதலைப்புலிகளுடன் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காணலாம் என்ற பகற்கனவை கைவிட்டு விட்டு விடுதலைப் புலிகளை அழிப்பதற்கான ஸ்ரீலங்காவின் முயற்சிக்கு திரு. தொண்டமான் ஆதரவளிக்கவேண்டுமென ஹெல உறுமயவின் கூட்டுச்செயலாளர்களான திலக் கருணாரத்னவும், ஹேமகுமார நாணயக்காரவும் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் கோரியுள்ளனர்.

புத்த பிக்குகளின் ஆலோசனைகளையே நிராகரித்து விட்ட நிலையில் விடுதலைப் புலிகளுடன் தொண்டமான் எதைச் சாதிக்க முடியுமெனவும் இவர்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

## பாராளுமன்றத் தெரிவுக்குழு ஸ்தம்பிதமடையும்?

வடக்கு - கிழக்கு நிரந்தர இணைப்புக்கான தீர்வொன்றை பாராளுமன்றத் தெரிவுக்குழு முன்வைக்காவிட்டால் இனப்பிரச்சினைக்கு அது ஒரு சாதகமான தீர்வை முன்வைக்கமுடியாது என்பதால் ஆறு தமிழ்க்கட்சிகள் பாராளுமன்றத் தெரிவுக்குழுவைப் பகிஷ்கரிக்கப் போவதாக அறிவித்துள்ளதாக கொழும்புப் பத்திரிகையொன்று தெரிவிக்கிறது.

மேலும் தெரிவுக்குழுவிலிருந்து விலக வேண்டுமென்ற தமது தீர்மானத்திற்கு ஆதரவாக கூட்டு எதிரணிக் கட்சிகளும் ஆதரவளிப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் "ஹெல உறுமய" குழுவின் தலைவர் திலக் கருணாரத்ன எம். பி கூறியுள்ளார்.

எனவே இன்று கூடும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் தொடர் செயற்பாடு தமிழ்க் கட்சிகள் பகிஷ்கரிப்பு, சிங்கள கட்சிகள் பகிஷ்கரிப்பு என்பவற்றை எதிர்நோக்குகிறது. இப்பகிஷ்கரிப்புக்கள் இடம் பெற்றால் இத்தெரிவுக்குழு செயலிழக்கலாம் எனக் கருதப்படுகிறது.

## பிக்குகள் ஆலோசனைக்கு காமினி ஜயசூரிய எதிர்ப்பு

கடந்த மாதம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த பௌத்த பிக்குகள் விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பித்த ஆலோசனைகளில் சிலவற்றைத் தாம் கடுமையாக எதிர்ப்பதாக காமினி ஜயசூரிய தலைமையிலான சிங்கள பாதுகாப்பு அமைப்பு தெரிவித்துள்ளது. கீழ்வரும் ஆலோசனைகளுக்கெதிராக அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

★ வடக்கும் கிழக்கும் தற்காலிகமாக இணைக்கப்பட்டதென்றும் ஏற்கெனவே அமுலில் இருக்கும் இணைப்பு சட்டபூர்வமற்றதாகையால் இணைப்பு இரத்துச் செய்யப்படவேண்டும்.

★ இணைப்பு நீடிக்கவேண்டுமா என்பது பற்றி மூன்று வருடங்களுக்குப்பின் கிழக்கு மாகாணத்தில் மட்டும் மக்கள் கருத்துக்கணிப்பு நடைபெற வேண்டுமென்பது ஏற்கக் கூடியதல்ல. மக்கள் கருத்துக் கணிப்பு முழு நாட்டிலும் நடத்தப்படவேண்டும்.

★ வெளிநாட்டு உதவிக

— 4 ஆம் பக்கம் பார்க்க

## வீரச்சாவு

மட்டக்களப்பு பகுதியில் கடந்த 15 ஆம் திகதி இடம் பெற்ற திடீர் மோதலில் மேஜர் குலதீபன் (நா. சச்சிதானந்தம் களுவாஞ்சிக்குடி) தயாநிதி (சி. தயாநிதி அம்பிளாந்துறை) வீரச்சாவு எய்தினர்.

## நான்கு மணிநேர குண்டு வீச்சு

நொச்சிமோட்டையை அண்டிய கிராமப்பகுதிகளில் நேற்று முன்தினம் நான்கு மணிநேரம் விமானக்குண்டு வீச்சு நடைபெற்றது.

## புதிய நடவடிக்கைகள் பற்றி ஆறுகட்சிகள் ஆலோசனை

அரசியல் அரங்கத்தில் தற்போது ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பரிசீலிக்கவும் விரைவான தேர்தலை நடத்த அரசாங்கத்துக்கு நெருக்கடி கொடுப்பது பற்றி பரிசீலிப்பதற்காகவும் ஆறு எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை கூட இருக்கின்றனர்

சுதந்திரக்கட்சி, சமசமாஜக்

பற்ற ஆர்வம் காட்டிய பொழுதும் அக்கட்சியினருக்கும் இன்னும் அழைப்பு விடுக்கப்படவில்லையெனத் தெரியவருகிறது.

## ● இந்திய சிறிலங்கா நடவடிக்கையை எதிர்க்கும் பலம் விடுதலைப்புலிகளுக்கு உண்டு

கைவிட்டு விட்டு விடுதலைப் புலிகளை அழிப்பதற்கான சிறிலங்காவின் முயற்சிக்கு

வர்களான திலக் கருணாரத்னவும், ஹேமகுமார நாணயக்காரவும் வெளியிட்டுள்ள

எதைச் சாதிக்க முடியுமென வும் இவர்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

# தனது நலன்களுக்காக இந்தியா புலிகளைத் தடைசெய்தது

## - தொண்டமான்

இந்திய அரசாங்கத்தின் நலன்களின் அடிப்படையில் அது தமிழீழ விடுதலைப்புலிகளைத் தடை செய்துள்ளது. நான் வரவேற்க வேண்டியதோ வரவேற்காமல் விட வேண்டியதோ இல்லை' என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் சர்வதேச அலுவல்கள் அமைச்சருமான எஸ். தொண்டமான் விடுதலைப் புலிகள் மீதான இந்தியத்தடை தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாக 'சண்டே டைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

சிறிலங்காவும் ஏககாலத்தில் விடுதலைப் புலிகளைத் தடை செய்ய வேண்டும் என்றும் அவ்வியக்கம் தடை செய்யப்பட்டதா இல்லையா என அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டுமென சிறிலங்கா சுதந்திரக்கட்சி தேசிய அமைப்பாளர் அனுர பண்டாரநாயக கோரிக்கை விடுத்துள்ளார்.

அதேவேளை விடுதலைப் புலிகள் பத்து வருடங்களுக்கு முன்பே தடை செய்யப்பட்டு விட்டதாக லலித் அத்துலத்முதலி கூறியுள்ளார்.

---

லங்கா சோசலிசக் கட்சித் தலைவர்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை கூட விருக்கின்றனர்.

சுதந்திரக்கட்சி, சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, நவ சமசமாஜக் கட்சி, ஜே. வி. பி என்பனவே இந்த ஆறு கட்சிகளுமாகும்.

ஐ. ஐ. தே. மு தலைவர்கள் இந்த நடவடிக்கைகளில் பங்கு

# நடவடிக்கையை எதிர்க்கும் பலம் விடுதலைப்புலிகளுக்கு உண்டு

விடுதலைப் புலிகள் இயக்கத்தை பலவீனப்படுத்த இந்திய-சிறிலங்கா கூட்டு நடவடிக்கைகளை எடுத்தாலும் கூட அதனை எதிர்த்துப் போராடக் கூடிய பலம் வாய்ந்த சக்தியாகவே இன்னும் அவ்வியக்கம் விளங்குகிறது என 'தி ஐலண்ட்' பத்திரிகையின் ஷமிந்திர பெர்னாண்டோ எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

ஏரல் பத்தொன்பதாம் திகதியிடப்பட்ட கட்டு-ஆம் பாதை பிரதி அமைப்பாளர் மாம்பனம் சுரேஷ் எழுதிய கடிதமொன்று பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள இக்கட்டுரையில் பாதுகாப்புப் படைகளுக்கெதிரான யுத்தம் தொடரும் மென சுரேஷ் அறிவித்ததமை பற்றியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

— 4 ஆம் பக்கம் பார்க்க

# ஜெனரல் ஸ்டான்லி சில்வா ஓய்வு பெறுகிறார்

அடுத்த மாதத்தில் மேஜர் ஜெனரல் ரொனி டி சில்வா இராணுவ சேவையிலிருந்து ஓய்வு பெறுவாரென நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

இவரது ஓய்வு பெறுதலை அடுத்து ஸ்ரீலங்காவின் எழுபதேழாயிரம் பேர் பலம் கொண்ட இராணுவத்தில் பல தொடர் பதவியுயர்வுகள் இடம் பெறுமெனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன

# தமிழ்மொழி கற்பித்தல் பற்றி வினாக்கொத்து மூலம் ஆய்வு

பாடசாலைகளில் "தமிழ் மொழி கற்பித்தலின் பலமும் பலவீனமும்" என்ற தலைப்பில் ஆய்வொன்று நடத்தப்படவுள்ளது.

இந்த ஆய்வின் முன்னோடி நடவடிக்கையாக தேசிய கல்வி நிறுவனத்தின் சகல மாவட்டங்களையும் சேர்ந்த தமிழ் மொழி சேவைப் பயிற்சி ஆலோசகர்களுக்கான கருத்தரங்கொன்று நடத்தப்பட்டு அவர்களுக்கு ஆய்வு வினாக்கொத்தொன்று வழங்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டன.

இந்த தரவுகளைக்கொண்டு தமிழ் மொழி கற்பித்தலை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# அது வேறு பிரச்சினை; இது வேறு பிரச்சினை - தொண்டா

"இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு தனது அறிக்கையைச் சமர்ப்பித்த பின்னர் யாழ்ப்பாணம் சென்று புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவது என்பது உங்களது முன்னைய திட்டமாக இருந்தது. அந்தத் திட்டத்தில் இனிமேல் மாற்றம் உண்டா?" என்று இ.தொ.கா. தலைவரும் அமைச்சருமான எஸ். தொண்டமானிடம் கொழும்பு நாளிதழின் நிருபர் ஒருவர் கேட்டபோது அவர் பின்வருமாறு பதிலளித்தார்.

"அதுவேறு பிரச்சினை, இது வேறு பிரச்சினை ஒரு சம்பவம் நடந்தால் வாழ்நாள் முழுவதும் நாம் அதனையா நினைத்துக் கொண்டிருக்கிறோம்."

## இன்று குருபூசை

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரின் குருபூசை இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதற்கான ஒழுங்குகளை கொழும்புத்துறை மேற்கு இந்து இளைஞர் மன்றம் மேற்கொண்டுள்ளது விசேட நிகழ்ச்சியாக இன்னிசைக் கச்சேரி, சொற்பொழிவுகள் என்பனவும் இடம்பெறும் (47)

# மத்தியஸ்தர்கள் பரீட்சை வடக்கு கிழக்கில் நடைபெறும்

வட கிழக்கு மாகாணத்தில் உள்ள வலைப்பந்தாட்டத்தில் ஆர்வமுள்ளவர்களுக்கு கார்த்திகை மாதத்தில் பரீட்சை ஒன்றை நடத்த மகரகம தேசிய இளைஞர் சேவை மன்ற விளையாட்டுப்பிரிவு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

விண்ணப்பப் படிவங்கள் தமிழ் அல்லது ஆங்கில மொழியில் கோரப்பட உள்ளதாகவும் போட்டிக்கான செயல்முறைப்பரீட்சை ஒன்றும் நடைபெற உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நடுவர்க்கான தரங்கள் மூன்றாகப் பிரிக்கப்படுமெனவும் மூன்று பிரிவுகளிலும் சித்தியடைந்தவர்களுக்கு தங்கப் பதக்கம் வழங்கப்படுவதுடன் அகில இலங்கை வலைப்பந்தாட்டப் போட்டிகளிலும், சர்வதேச ரீதியிலான வலைப்பந்தாட்டப் போட்டிகளிலும் நடுநிலைமை வகிப்பதற்கான தகுதியை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பும் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது.(15)

# தாய்லாந்தில கலவரம் தொடர்கிறது 20க்கும் அதிகமானோர் பலி!

தாய்லாந்தில் படையினருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்குமிடையே பாங்கொக்கில் நடந்த மோதல்களில் இருபதுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் அரச கட்டிடங்களில் நுழைவதைத் தடுக்கும் முயற்சியில் இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

தாய்லாந்து தலைநகரில் பீரங்கி வேட்டுக்கள் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருப்பதாகவும் பல கார்களும் கட்டிடங்களும் எரிக்கப்பட்டுள்ளதாகவும். அமளியும் கலவரமும் அங்கு தொடர்வதாகவும் நேற்று பிற்பகல் கிடைத்த ஏஜென்ஸி செய்திகள் தெரி

## மன்னாருக்கு

## சுதந்திரகட்சி-காமினி இரகசிய ஒப்பந்தம்

ஸ்ரீலங்கா சுதந்திரகட்சிக்கும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்கும் இடையே இரகசிய ஒப்பந்தம் ஒன்று உள்ளதா?

ஐக்கிய தேசியக் கட்சியின் இக்குற்றச்சாட்டில் உண்மையில்லை என்று இம் முன்னணித் தலைவர்களில் ஒருவரான காமினி திஸநாயக்கா ஒந்தெனியவில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

## இரு முஸ்லிம்கள் கடத்தல்

பொலநறுவை மாவட்டத்தின் எல்லைப் புறத்திற்கு அருகே அமைந்துள்ள முஸ்லிம் கிராமங்களிலிருந்து இரண்டு முஸ்லிம்கள் இனந்தெரியாதோரால் கடந்த புதன்கிழமை கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## வவுனியாவில் வெசாக்

வவுனியா நகர வெசாக் கொண்டாட்டம் இம் முறை சிறப்பாக இருந்தது என கொழும்புப் பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

நகர கடைகளில் வெளிச்சக் கூடுகள் கட்டப்பட்டிருந்தன எனவும் இச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது

## பாராட்டுவிழா

பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியிலிருந்து க. பொ. த. (சா/த) பரீட்சைக்குத் தோற்றி அதி சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்ட மாணவிகளைக் கௌரவிக்கும் பாராட்டும் முகமாக கல்லூரி அபிவிருத்திச் சபை விழா வொன்றை அதிபர் திருமதி குமாரசாமி தலைமையில் நடாத்தவுள்ளது.

## நாய்களுக்கு தடுப்பூசி

வடமராட்சிப் பகுதியில் நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி போடும் நடவடிக்கைகளை சுகாதார சேவைத் திணைக்களமும், கால்நடை வைத்திய சுகாதாரத் திணைக்களமும் துரிதமாக மேற்கொண்டு வருகின்றன.

வடமராட்சியில் உள்ள நெல்லியடி, பருத்தித்துறை, புலோலி, துன்னாலை, அல்வாய், வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, கரணவாய் ஆகிய எட்டு பொது சுகாதார பரிசோதகர் பிரிவுகளிலும் தெரிவு செய்யப்பட்ட நிலையங்களில் வைத்து நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசிகள் போடப்பட்டு வருகின்றன. (11)

# எதிரணியின் எதிர்ப்பு கூட்டம் 29 ஆம் திகதி கண்டியில்

எதிரணியினரின் அரச எதிர்ப்பு பொதுக்கூட்டமொன்று 29 ஆம் திகதி கண்டியில் நடைபெறவுள்ளது.

எதிரணி கட்சியின் மேதினக் கூட்டத்தில் கலந்து கொண்ட அரசியற் கட்சிகள் இந்தப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளன.

தேர்தல் ஆணையாளரின் அறிக்கை, முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் உடுகம்பொல அறிக்கை தொடர்பாக விவாதிக்க அரசு சந்தர்ப்பம் வழங்காத காரணத்தினால் மேற்படி இரண்டு விடயங்கள் தொடர்பாக மக்கள் முன் கொண்டு செல்ல பொதுக் கூட்டங்களை நடத்துவதென எதிரணியினர் தீர்மானித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# பதவி உயர்வு பெற்ற 19பேரில் எழுவர் மட்டுமே தமிழர்

சுங்கத் திணைக்களத்தில் ஏழு உதவி சுங்கப் பணிப் பணிப்பாளர்கள் பிரதி பணிப்பாளர்களாகவும் 12 சுங்க அத்தியட்சகர்கள் சிரேஷ்ட உதவிப் பணிப்பாளர்களாகவும் பதவி உயர்வு பெற்றுள்ளனர்

கே. பொன்னம்பலம், எஸ். இராசநாதன், எஸ். பத்மநாதன் ஆகியோர் பதவி உயர்வு பெற்ற பிரதி சுங்க பணிப்பாளர்களிலும் ஏ. ஜோசப், ரி. கணநாதலிங்கம் பி. கந்தசாமி, ஏ. ஆனந்தலிங்கம் ஆகியோர் பதவி உயர்வு பெற்ற சிரேஷ்ட உதவிப்பணிப்பாளர்களிலும் அடங்குவர்.

# ஈழத்து கவிஞர்கள் பற்றிய

# இலங்கையிலும் தடைசெய்ய...

விடுதலைப்புலிகள் இயக்கத்தை இந்திய அரசு தடை செய்துள்ளதுபோல் அவ்வியக்கத்தை இலங்கையிலும் தடை செய்ய வேண்டுமென ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தேசிய அமைப்பாளரான அனுரா பண்டாரநாயக்கா அரசைக் கோரியுள்ளார்.

நேற்று வெளியான கொழும்பு நாளிதழ்ஒன்று இச் செய்தியை வெளியிட்டுள்ளது.


சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம் சாவகச்சேரி

## வர்த்தக முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரல் (1068)

சம்பள அளவுத் திட்டம் 1005 - 1705 / 40 5 - 50 10

(அரசுடன் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட படிகளும்)

மேற்படி பதவிக்கு கீழ்வரும் தகைமையுடைய ஆண்பாலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன விண்ணப்பங்கள் சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்து கல்விச் சான்றிதழ், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், அனுபவச்சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகளுடன் "பொதுமுகாமையாளர், சாவகச்சேரி. ப. நோ. கூ சங்கம், சாவகச்சேரி" என்ற விலாசத்திற்கு 07. 06 92 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ சமர்ப்பித்து உறுதிப்படுத்தவும்,

மேலதிக விபரங்கள் தேவைப்படின் சங்கக் காரியாலயத்தில் பார்வையிடலாம்.

கல்வித்தகமை :

1. கூட்டுறவு பணியாளரின் 9 ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை அல்லது மேற்பார்வை மட்டத்திலான பதவியில் மூன்று வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப்பணியாளர் 10 ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 6 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

11. வர்த்தக/ தொழிற்துறை ஸ்தாபனம் ஒன்றின் முகாமை மட்டத்திலான பதவியும், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டதாரி.

அல்லது

111. கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் (உயர்தரம்) க. பொ. த (உயர்தரம்) 3 பாடங்களிலான சித்தியுடன் சந்தைப்படுத்தல்/ வழங்கல்/ பொருள் விநியோகம் பொருட்களின் இறக்குமதி/ ஏற்றுமதி என்ற துறைகளில் வர்த்தக/தொழிற்துறை ஸ்தாபனம் ஒன்றின் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

2. வயது : 23- 40

3. நிபந்தனைகள் :

அ) விண்ணப்பதாரர் 2 வருடத்துக்கு மேல் யாழ் மாவட்டத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

ஆ) சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இ) ஆங்கிலம் அல்லது சிங்களம் பேச, எழுத, வாசிக்க தெரிந்திருத்தல் விரும்பத்தக்கது.

ஈ) சங்கத்தால் நிர்ணயிக்கப்படும் பிணைப்பணம் செலுத்த தயாராக இருத்தல் வேண்டும் (ரொக்கம், ஆதனம்)

உ) தெரிவு செய்யப்படுபவர் தொடர்ந்து மூன்று வருட

தைத் தடுக்கும் முயற்சியில்

## மன்னாருக்கு படகுச்சேவை

கற்பிட்டியிலிருந்து- மன்னாருக்கு 400 பேரை ஏற்றிச் செல்லக்கூடிய விசாலமான படகு ஒன்று நேற்று முதல் புனர்வாழ்வு அமைச்சினால் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகிறது.

ஒன்றுவிட்ட ஒரு நாளுக்கு கற்பிட்டியிலிருந்து மன்னாருக்கு இந்த சேவை நடத்தப்படவுள்ளது.

[illegible] இங்கு தொடர்வதாகவும் நேற்று பிற்பகல் கிடைத்த ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

தலைநகர் பாங்கொக்கில் நெருக்கடிநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

தாய்லாந்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரே பிரதமராக இருக்க வேண்டுமெனவும் தற்போதைய பிரதமர் பதவி விலகவேண்டுமெனவும் அரசுக்கெதிரான ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிவருகின்றனர்.

## ஈழத்து கவிஞர்கள் பற்றிய தொகுப்பு உருவாகிறது

ஈழத்து தமிழ்க் கவிதை நூல்கள், கவிஞர்கள் பற்றிய தொகுப்பு ஒன்று விரைவில் வெளியிடப்படவுள்ளது.

பாதுமூரானின் தமிழ்த் தென்றல் கவிதை நூல் வெளியீட்டு விழாவில் யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் அ சண்முகதாஸ் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இத்தகவலைத் தெரிவித்தார்.

கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை, விரிவுரையாளர் சோ. பத்மநாதன் ஆகியோர் அங்கு சிறப்புரை ஆற்றுகையில் கவிதை ஆக்கியவர்களுக்கு முன்பாகவே வேறோர் கவிஞர் அக்கவிதைக்கு உரிமைகோருவதைத் தடுக்க இம்முயற்சி உதவும் எனத் தெரிவித்தனர். (09)

ஆதனம்)

உ) தெரிவு செய்யப்படுபவர் தொடர்ந்து மூன்று வருட காலத்தில் கடமை புரிவதற்கான சம்பந்த பத்திரத்தில் கையொப்பமிட வேண்டும்.

ஊ) விண்ணப்பப்படிவத்துடன் கல்விச்சான்றிதழ், அனுபவச் சான்றிதழ் அறிவிட அத்தாட்சிப்பத்திரம், பிறப்புச் சான்றிதழ், உண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்
சாவகச்சேரி. ப. நோ. கூ. சங்கம்,
சாவகச்சேரி.

17. 05. 1992.

05034

★ அடுத்த ஜனாதிபதித் தேர்தல்

# சுதந்திரக்கட்சியைச் சேர்ந்தவரே பொது வேட்பாளராகவேண்டும்

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எந்தப் பொது வேட்பாளரும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்தவராகவே இருக்க வேண்டுமென ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தேசிய அமைப்பாளர் அனுரா பண்டாரநாயகா தெளிவு படவும் திட்டவட்டமாகவும் கூறியுள்ளார்.

எதுவித சர்ச்சையுமின்றி திருமதி பண்டாரநாயகாவே எமது கட்சித் தலைவர் என்று கூறியுள்ள அனுரா பண்டாரநாயக்கா, திருமதி பண்டாரநாயக பதவி விலகும்போது அப்பதவிக்கு தாம் போட்டியிடுவார் எனவும் அதுவரைக்கும் கட்சியின்

- அனுரா

வேறெந்த பதவிக்கும் தாம் போட்டியிடப்போவதில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இதேநேரம் கட்சித் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல்செய்யும் தினம் ஜூலை இருபத்தைந்தாம் திகதி என கட்சித் தலைமை பீடம் தெரிவு செய்துள்ளது.

இத்தினம் அனுரா பண்டாரநாயகவுக்கு சோதிட ரீதியில் பாதகமானதும், திருமதி பண்டாரநாயகவுக்குச் சாதகமானதுமென கட்சியைச் சேர்ந்த பலர் கூறுகின்றனராம்.

எனினும் அனுரா விசுவாசிகள் பலர் கட்சிப்பதவிகளுக்கு போட்டியிடுவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## மேலும் ஒரு ஹோட்டல் திட்டத்துக்கு கடும் எதிர்ப்பு

உடவளவை தேசிய பூங்காப் பகுதியில் ஹோட்டல் ஒன்றை அமைப்பதற்கு வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு இருபது ஏக்கர் காணியை விற்பனவு செய்ய மகாவலி அதிகாரசபை எடுத்த நடவடிக்கைக்கு கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

அரசசார்பற்ற நிறுவனங்கள் மட்டுமல்ல வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களமும் இதற்கு ஆட்சேபனை தெரிவித்துள்ளது.

சூழல் ஆலோசனைக் குழுவும் தமது அங்கீகாரமின்றி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக சுட்டிக்காட்டியுள்ளது.

அண்மையில தம்புலவையில் உல்லாசப்பிரயாண ஹோட்டல் அமைப்பதற்கும் பலர் எதிர்ப்புத் தெரிவித்தமையும் இங்கே குறிப்பிடத்தக்கது.

## மனைவி கைது

இலங்கையரான பொறியியலாளர் நிமால் சமரசிங்காவின் கொலை தொடர்பாக அவரது மனைவியை லண்டன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## சென்னை அகதிமுகாமில் 5 இலங்கையர் கைது

ராஜீவ்காந்தி கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்ற குற்றச்சாட்டில் இரு பெண்கள் உட்பட ஐந்து இலங்கைத் தமிழர்கள் சென்னையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிறப்புப் புலனாய்வுக் குழுவின் நீண்ட நாள் வேவு பார்ப்பின் பின்னர் இவர்கள் சென்னையில் உள்ள அகதி முகாமில் வைத்து கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ராஜீவ்காந்தி கொலையில் இவர்களும் குற்றவாளிகளாக சேர்க்கப்பட்டதையடுத்து இக்கொலை வழக்கில் குற்றவாளிகளாகக் காணப்பட்டவர்களின் தொகை 27 ஆக உயர்ந்துள்ளது.

கைதானவர்களில் ரி. விஜயானந்தன், பி. சிவரூபன் ஆகியோர் தேடப்பட்டு வந்தவர்கள் எனவும் இவர்களுடன் சண்முகவடிவேலு, சாந்தி, செல்வலஷ்மி ஆகியோரும் கைதானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பேசாலைக்கு மின்சாரம்

மன்னாரில் பேசாலை, எருக்கலம்பிட்டி, எழுத்தூர் ஆகிய பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

தற்பொழுது மன்னார் நகருக்கு மட்டும் ஜெனரேட்டர் மூலம் மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

மன்னார் நகருக்கு மின் விநியோகத்தை வழங்குவதற்கென புதிதாக 250 கே.வி வலுவுடைய மின் பிறப்பாக்கியொன்றும் வழங்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க மன்னாருக்கு சில பஸ்வண்டிகளும் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## வாகரைப் பகுதியில் படையினர் தேடுதல் வேட்டை

மட்டக்களப்பின் வடக்கில் வாகரையை மையமாகக் கொண்டு பல்லாயிரக்கணக்கான படையினர் கவசவாகனங்கள், குண்டு வீச்சு விமானங்கள், ஹெலிகொப்டர்கள் உதவியுடன் தேடுதல் வேட்டையை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த வெள்ளி முதல் நடைபெறும் இத்தேடுதலினால் பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். முன்னர் வாகரை, கதிரவெளிப் பகுதியில் இராணுவ முகாம்கள் இருந்தன.

இவற்றுக்கு ஏனைய முகாம்களிலிருந்து உதவி கிடைப்பது தாமதமாகவே இருந்தது. இம்முகாம்கள் புலிகளின் தாக்குதலுக்கும் அடிக்கடி இலக்காகின.

இதனால் இவை வாழைச்சேனைப் பகுதிக்கு இடமாற்றப்பட்டன. இதைத் தொடர்ந்து இப்பகுதியில் மக்கள் மீளச்சென்று குடியமர்ந்தனர்.

இப்போதைய தேடுதலினால் மக்கள் மீண்டும் இடம் பெயர்ந்துள்ளனர்.

### நடவடிக்கையை...

புலிகள் அதிக அளவில் கிழக்கில் செயற்படுவதாகவும் கிழக்கில் சகஜநிலையை ஏற்படுத்திவிட்டதாகவும் அரசு கூறுவது உண்மைக்கு புறம்பான தென்றும் குறிப்பிட்டுள்ள சுரேஷ் கிழக்குத் தமிழர்களை அழிக்க அரசு திட்டமிடுவதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே 'ஐலண்ட்' பத்திரிகையில் தாரகி எழுதிய கட்டுரையிலும் இன்னும் ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டாலும் கூட இந்தியா தமது உளவுச்சி எதிர்ப்பு நிபுணர்களைக் கொண்டு விடுதலைப் புலிகளை அழித்து விடமுடியுமா என்ற கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

### இந்தியத்...

தொடர்புகொண்டால் அது இந்தியாவை ஸ்ரீலங்கா அரசு பகைப்பதாகவே இந்திய அரசு எடுத்துக் கொள்ளும் என மற்றைய பிரிவு எச்சரிக்கிறது.

இதேவேளை புலிகள் தலைவர் பிரபாகரனை நாடு கடத்துமாறு இந்தியா கோரலாம் என்ற செய்தி குறித்து கருத்து வெளியிட்ட வணிகஹேரத் என்ற பௌத்த தேரர் "இந்தியா அந்நிய நாட்டு பிரசைதான் இலங்கையர் எனவே இந்தியா அவரை நாடுகடத்த எடுக்கும் முயற்சிக்கு அனுமதியளிக்குமுன் அது குறித்து ஸ்ரீலங்கா அரசு சிந்திக்க ஆராய வேண்டும் என்றார்.

புலிகளுடன் சமாதானப் பேச்சுநடத்தக்கூடாது நடத்தினால் அது புலிகளை அங்கீகரிப்பதாக அமையும் எனவும் புலிகள் தலைவர் பிரபாகரனை கைது செய்ய இந்தியா நேரடியாக நடவடிக்கை எடுக்க ஸ்ரீலங்கா அரசு அனுமதிக்க வேண்டும் என விமலரட்ன தேரர், வணிகசிவதேரர் ஆகியோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## விடுதலைப்புலிகள் மீதானதடை மூன்று கருத்துக்கள்!

விடுதலைப்புலிகளை இந்தியா தடைசெய்ததற்கு மூன்று கருத்துக்கள் பரந்த அளவில் வெளிநாடுகளில் முன்வைக்கப்படுகின்றன என கொழும்பு ஆங்கில ஞாயிற்றுக்கிழமை பத்திரிகையொன்றில் எழுதப்பட்டிருக்கும் கட்டுரை ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

முதலாவதாக இலங்கையிலும் "தடை"க் குரல்கள் எழுப்பப்பட்டு டெல்லியை பின்பற்றி விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தை யூ.என்.பி. அரசுக்கு ஏற்படுத்துவது. அதன்மூலம் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் சாத்தியத்தை இல்லாமல் செய்வது; டெல்லி அப்படிச் செய்துவிட்டதாகவே ஒரு இராஜதந்திரி கூறியுள்ளார்.

இரண்டாவதாக தெற்கு வடக்கு சமநிலை தமிழகத்தில் உள்ள பல சக்திகளுடன் சேர்ந்து "பரந்த ஈழம்" ஒன்றை விடுதலைப்புலிகள் உருவாக்கலாமென ஜெயலலிதா போன்றோர் அஞ்சுவதும்,

அத்துடன் தென் மாநிலங்களிலிருந்தும், வட இந்திய பிராமண ஆதிக்கத்துக்கு வெளியேயிருந்தும் நரசிம்மராவ் பிரதமராகியிருப்பதும் ஆகாலிஸ்தானில் இந்திய செல்வாக்கு அற்றுப்போவதும் பாகிஸ்தானும் ஈரானும் தமது பலத்தை அதிகரிப்பதும், ஆகும்.

மூன்றாவதாக தமிழ் பிரிவினைவாத சக்திகளை ஆதரித்த இந்திய கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த சிறிலங்காவின் ஆதரவை இழந்து விட்டது இதைச்சரி செய்யும் முகமாக சிங்கள பௌத்த சக்திகளை புலிகள் எதிர்ப்பு நடவடிக்கைக்கு தளம் அமைக்க ஆதரவு தந்து இந்தியப்படையை மீண்டும் வரவழைப்பிக்கக் கூடிய சாத்தியத்தை ஏற்படுத்தல்.

★ இன்ரர் போலிடமிருந்து தகவல்

## கைதான சுவிஸ்பிரஜை லெபனான் யுத்த போராளி

எக்கலையில் அண்மையில் பெருமளவு ஆயுதங்களுடன் கைதான சுவிஸ் பிரஜையைப்பற்றிய முக்கிய தகவல்களை சுவிஸில் உள்ள இன்ரர் போல் இலங்கைப் பொலிஸாருக்கு அனுப்பிவைத்துள்ளது.

இந்த சுவிஸ் பிரஜையைப் பற்றிய தகவல்களை அனுப்பிவைக்குமாறு குற்றத்தடுப்பு விசேடபணியகம் சுவிஸில் உள்ள இன்ரர் போலிடம் கேட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இவர் லெபனானில் இஸ்லாமிய தீவிரவாத இயக்கத்துடன் நின்று யுத்தத்தில் போராடியவர் எனவும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

## பத்திரிகைச் செய்திக்கு அஷ்ரப் மறுப்பு அறிக்கை

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவளிக்கும் எனத் தீர்மானம் அட்டாளைச்சேனையில் பேசவில்லை என பத்திரிகைச் செய்திகள் தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார்.

அடுத்த முறையும் ஜனாதிபதியாக பிரேமதாஸ வரவேண்டும் என வாழ்த்தினேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அஷ்ரப்பின் இந்தப் பேச்சினால் முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளர் சேகு இஸ்ஸதீனுக்கும் - அஷ்ரப்புக்கும் இடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டு சேகு இஸ்ஸதீன் முஸ்லிம் காங்கிரஸிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளார். (06)

## பிரதேச செயலக அமைப்பால் அரச அதிபர்கள் பதவி இழப்பர்?

ஒன்றிணைக்கப்பட்ட பிரதேச செயலகங்களின் அமைப்புக்கெதிராக அரசாங்க அதிபர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

### பிக்குகள்...

ளைப் பிரதேச சபைகள் நேரடியாகப் பெறமுடியாது; மாகாணசபைகளுக்கு மேலும் அதிகாரம் வழங்குவதை இவ்வமைப்பு எதிர்க்கிறது. அது மட்டுமல்ல காணி மற்றும் சட்டம் ஒழுங்கு தொடர்பாக வழங்கப்பட்ட அதிகாரங்கள் வாபஸ் பெறப்பட வேண்டும்.

இந்த முறை அரசியலமைப்புச் சட்டத்தையும் அதன் பதின்மூன்றாவது திருத்தத்தையும் மீறுவதாகவும் இவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஜனாதிபதியே அரச அதிபர்களின் இணைப்புப்பணியின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய போதும், ஒன்றிணைக்கப்பட்ட பிரதேசச் செயலகத்திட்டம் அரசாங்க அதிபர் என்ற பதவியையே இல்லாமல் செய்து விடுமெனவும் அரச அதிபர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெற் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லட்சுமி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 19-05-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது